**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 448/2022**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கார்த்திகேயன் | **Caste** | : | |
| **Father's Name** | : | அழகர் | **Calling** | : | பிசினஸ் |
| **Village** | : | பாறைப்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | **29** |
| | | | **Dated** | : | **08.01.2025** |

**08.01.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 திரு. **கார்த்திகேயன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரிகள் ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் பாறைப்பட்டியில் குடியிருந்து பிசினஸ் செய்து வருகிறேன். கடந்த 22.03.2022 ம் தேதி இரவு 10.30 மணியளவில் எனது கடைக்கு முன்பு எனது இருசக்கர வாகனமான TN–57–BE–3313 ஐ நிறுத்திவிட்டு எனது காரை எனது அண்ணன் வீட்டில் விடுவதற்காக சென்றிருந்தேன். 11.40 மணிக்கு திரும்ப வந்து பார்த்தபோது எனது பைக்கை காணவில்லை. பின் 22.03.2022 ம் தேதி திண்டுக்கல் நகர் மேற்கு காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகாரில் என்ன எழுதியுள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும். 30.03.2022 ம் தேதி காவல் நிலையத்திலிருந்து எனக்கு போன் செய்து இருசக்கர வாகனம் கிடைத்துவிட்டதாக தகவல் சொன்னார்கள். பின் காவல்நிலையம் சென்று நான் எனது வாகனத்தை அடையாளம் காட்டினேன்.பின் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எனது வாகனத்தை இடைக்கால பொறுப்பில் பெற்றுச்சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது

என்னுடைய வாகனம் தான். (**புகார் அதசாஆ.1 ஆகவும், புகைப்படம் 3 எண்ணிக்கை அதசாஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** )போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வழக்கு சம்பத்தன்றே புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். நீதிமன்ற அழைப்பானையில் கையொப்பம் செய்துள்ளது போல் தான் நான் வழக்கமாக கையொப்பம் செய்வேன் என்றால் சரிதான். நான் காரை எந்த இடத்தில் விட்டுவிட்டு யாருடன் எவ்வாறு சம்பவ இடத்திற்கு வந்ததாக புகாரில் குறிப்பிட்டு எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கடையில் CCTV பொறுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் பதிவுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் போலிசாரிடம் ஒப்படைத்தேன். நான் சொல்வதுபோல் எந்த சம்பமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.01.08 15:22:07 +0530

Judicial Magistrate No.I
Dindigul.

**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**
**DINDIGUL.**

**C.C.No. 448/2022**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சூர்யா | **Caste** | : | |
| **Father's Name** | : | முருகேசன் | **Calling** | : | மேனேஜர் |
| **Village** | : | நல்லமநாயக்கன்பட்டி | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | 27 |
| | | | **Dated** | : | **08.01.2025** |

**08.01.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 2 திரு. **சூர்யா** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 2 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**<u>எதிரிகள் ஆஜர்</u>**

1. நான் திண்டுக்கல் நல்லமநாயக்கன்பட்டியில் குடியிருந்து மேனேஜராக வேலை செய்து வருகிறேன். வாதி கார்த்திகேயன் எனது நண்பர். நான் மதுரையில் வேலை செய்வதால் எனது வண்டியை கார்த்திகேயனிடம் கொடுத்திருந்தேன். 22.03.2022 ம் தேதி இரவு 12.15 மணியளவில் கார்த்திகேயன் எனக்கு போன் செய்து வண்டியின் இன்சூரன்ஸ் அனுப்பு என சொன்னார். நான் எதற்கு என்று கேட்டபோது அவர் பதில் எதுவும் சொல்லவில்லை. திரும்ப திரும்ப கேட்டபோது வாகனம் தொலைந்து விட்டதாக சொன்னார் அதனால் நான் மறுநாள் காலை 05.30 6.00 மணியளவில் மதுரையிலிருந்து திண்டுக்கலுக்கு வந்தேன். நானும் கார்த்திகேயனும் எனது நண்பர்களும் சேர்ந்து வாகனத்தை தேடினோம். கிடைக்காததால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். 30.03.2022 ம் தேதி வாகனம் கிடைத்துவிட்டதாக கார்த்திகேயனிடம் போலிசார் சொன்னதாக என்னிடம் சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான் கார்த்திகேயன் சொல்லித்தான் தெரியும். நான் தனியாக புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. புகார் கொடுக்க நானும் உடனே சென்றேனா என்றால் ஆம். புகாரில் சாட்சி கையொப்பம் செய்தேனா என்றால் ஆம்.

**மறுவிசாரணை இல்லை**.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

SOUMYA MATHEW Digitally signed by SOUMYA MATHEW Date: 2025.01.08 15:22:17 +0530

Judicial Magistrate No.I
Dindigul.